

கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புதிய வருமான வரி சட்ட மசோதாவின் உட்பிரிவுகளை ஆராய்வதற்காக 31 உறுப்பினர்களைக் கொண்ட குழுவில் நியமிக்கப்பட்டதற்கான சான்றிதழை வடசென்னை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

### ஆதிக்கத் திணிப்புகளுக்கு அஞ்சாமல்

# அன்னைத் தமிழைக் காக்க உறுதியேற்போம்!

## உலகத் தாய்மொழி நாளில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பதிவு!

**சென்னை, பிப்.23-**

**உலகத் தாய்மொழி நாளையொட்டி, கழக துணை பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி விடுத்த வலைதளப் பதிவில், "ஆதிக்கத் திணிப்புகளுக்கு அஞ்சாமல் அன்னைத் தமிழைக் காக்க உறுதியேற்போம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது வலைதளப் பதிவு வருமாறு:

வாழ்க நிரந்தரம் - வாழ்க தமிழ் மொழி - வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம்



வீசி இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ் மொழி! என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று சுடர்க தமிழ்நா டே!

உயிராக, வாழ்வியல் நெறியாக, அறமாக, சினமாக, சிந்தனை மொழியாக, அறிவியல் வழியாக, தமிழரின் தனிப்பெரும் உணர்வாக, உலக மொழிக்கெல்லாம் ஒளிதரும் செம்மொழியாக உதிரத்தில் கலந்துவிட்ட தாய்த் தமிழை போற்றி வணங்கிடுவோம்.

ஆதிக்கத் திணிப்புகளுக்கு அஞ்சாமல் அன்னைத்தமிழைக் காக்க உறுதியேற்போம்! தமிழ் வாழ்க!

இவ்வாறு அப்பதிவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

### குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் சர்ச்சைப் பேச்சு!

# 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!'

## கனிமொழி கருணாநிதி எம்.பி. 'எக்ஸ்' தளத்தில் பதிவு!

**சென்னை, பிப்.23–**

**குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் சர்ச்சைப் பேச்சுக்கு, 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!' எனத் தனது 'எக்ஸ்' வலைதளப் பக்கத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பதிவிட்டுள்ளார்.**




சமீபத்தில் நடந்த 98-வது அகில பாரதிய மராத்தி சாகித்ய சம்மேளம் நிகழ்ச்சியில் பங்கேற்று ஜெகதீப் தன்கர் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், "ஒரு நிலத்தைக் கைப்பற்றுவதற்கு அதன் மொழியை அழிப்பதே சிறந்த வழி", நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்குள் படையெடுத்தவர்கள் இதைத்தான் செய்தார்கள் என ஜெகதீப் தன்கர் பேசியுள்ளார்.

இந்த நிலையில், குடியரசுத் துணைத்தலைவர் ஜகதீப் தன்கர் சர்ச்சை பேச்சுக்கு, கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தனது 'எக்ஸ்' வலைதளப் பக்கத்தில் 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!' எனச் சாடியுள்ளார்.

### கழக தலைவர் – முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு

# வேலூர் மாநகர தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*வேலூர், பிப்.23-*

*வேலூர் மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*வேலூர் மாநகர தி.மு.க. செயற்குழு அவசர கூட்டம் மாநகர அவைத்தலைவர் சூரி (எ) அ.கோவிந்தன் தலைமையில் நாளை (24.02.2025) மாலை 6.00 மணியளவில் வேலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.*

*இதில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் கலந்து கொள்ள உள்ளனர். எனவே மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், மாநகரத்திற்குட்பட்ட செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளர்கள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சென்னை, கிண்டி தொழிற் பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள Industry 4.0 தொழில் நுட்ப மையத்தில், பலவகை தொழில் நுட்பக் கல்வி விரிவுரையாளர்களுக்கு நடைபெற்று வரும் பயிற்சியினை பார்வையிட்டு, விரிவுரையாளர்களிடம் பயிற்சியின் தன்மைகள் குறித்து கேட்டறிந்தார். உடன் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற துணைத் தலைவர் எம்.பி.விஜயகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு & வேலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | மாவட்ட கழக அலுவலகம், திருக்கோயிலூர் சாலை, திருவண்ணாமலை. |
| 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | என்.கே.பி. பார்ட்டி ஹால், போளூர் புறவழிச் சாலை, ஆரணி. |
| 26.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | வேலூர் | எல்.கே.என். மஹால், காட்பாடி – குடியாத்தம் சாலை, லத்தேரி, வேலூர் |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 21-02-2025



### விருப்ப மொழி என்ற பெயரில் இந்தியைத் திணிக்க முயற்சி!

# ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசை நிர்பந்தம் செய்வது வீண்பிடிவாதம்!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

*சென்னை, பிப்.23-*

*மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் விருப்ப மொழி என்ற வழக்கமான வார்த்தை ஜாலங்களை கூறி இந்தியை மறைமுகமாக ஒன்றிய அரசு திணிக்க முயற்சிக்கிறது. ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசை நிர்பந்தம் செய்வது வீண்பிடிவாதம் என "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.*

*அது வருமாறு:-*



தினகரன்

பிப்ரவரி 22, 2025 சனிக்கிழமை

வீண் பிடிவாதம்

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு மாநிலங்களின் நிர்வாகத்தில் தலையிடுவதும், மாநிலத்திற்கென வகுக்கப்பட்டுள்ள உரிமைகளை மெல்ல பறிப்பதுமாக உள்ளது. கல்வித்துறை, உள்ளாட்சி நிர்வாகம், மின்சாரம் என பெரும்பாலான துறைகளில் தலையிட்டு மறைமுகமாக மாநிலங்களில் ஆதிக்கம் செலுத்த ஒன்றிய அரசு முயற்சித்து வருகிறது. தன்னுடைய கொள்கைகள், திட்டங்களை மாநிலங்களில் புகுத்தி, மாநில அரசுகளின் உரிமைகளை பறித்து டெல்லியில் இருந்துகொண்டு நாடு முழுவதும் நாட்டாமை வேலை பார்ப்பது என்பதுதான் ஒன்றிய அரசின் பிரதான திட்டமாக இருந்து வருகிறது. இந்த அடிப்படையில்தான் மும்மொழி கொள்கை திட்டம் என்ற பெயரில் தமிழ்நாட்டினை வஞ்சிக்க ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.

*பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு மாநிலங்களின் நிர்வா கத்தில் தலையிடுவதும், மாநிலத்திற்கென வகுக்கப்பட்டுள்ள உரிமைகளை மெல்ல பறிப்பதுமாக உள்ளது. கல்வித்துறை, உள்ளாட்சி நிர்வாகம், மின்சாரம் என பெரும்பாலான துறைகளில் தலையிட்டு மறைமுகமாக மாநிலங்களில் ஆதிக்கம் செலுத்த ஒன்றிய அரசு முயற்சித்து வருகிறது. தன்னுடைய கொள்கைகள், திட்டங்களை மாநிலங்களில் புகுத்தி, மாநில அரசுகளின் உரிமைகளை பறித்து டெல்லியில் இருந்து கொண்டு நாடு முழுவதும் நாட்டாமை வேலை பார்ப்பது என்பதுதான் ஒன்றிய அரசின் பிரதான திட்டமாக இருந்து வருகிறது. இந்த அடிப்படையில்தான் மும்மொழி கொள்கை திட்டம் என்ற பெயரில் தமிழ்நாட்டினை வஞ்சிக்க ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.*

*அதாவது தமிழ்நாட்டின் தாய்மொழியான தமிழ், இணைப்பு மொழியான ஆங்கிலம் ஆகிய 2 மொழிகள் மட்டுமே கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ள தமிழ்நாட்டில் மூன்றாவதாக ஒரு விருப்ப மொழி என்ற பெயரில் இந்தியை மறைமுகமாக ஏற்றுக்கொள்ளச் செய்வதும், அதற்கு வசதியாக தேசிய கல்வி கொள்கையை அமல்படுத்தி அதன் மூலம் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றவும் ஒன்றிய அரசு துடித்து வருகிறது.*

*ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஏற்கனவே பலமுறை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நிலையில், மும்மொழி கொள்கையை ஏற்றுக்கொள்ளும் வரை சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய ரூ.2,152 கோடி நிதியை விடுவிக்க முடியாது என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பகிரங்கமாக அறிவித்திருப்பதோடு, மாணவர்களின் கல்வியை வைத்து ஒன்றிய அரசு அரசியல் செய்ய தொடங்கி உள்ளது.*

*ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையானது தமிழ்நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. ஏற்கனவே பேரிடர் மேலாண்மை நிதி, ஜிஎஸ்டி பங்களிப்பு என தமிழ்நாட்டிற்கு நியாயமாக கிடைக்க வேண்டிய நிதிகளை கூட ஒதுக்காமல், பா.ஜ. ஆளும் மாநிலங்களுக்கு 3 மடங்காக வாரி வழங்கி வரும் நிலையில், தற்போது கல்வி நிதியை தமிழ்நாட்டுக்கு வழங்காமல் மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொள்ள நிர்பந்தம் செய்து வருகிறது.*

*மும்மொழி கொள்கை என்ற பெயரில் விருப்ப மொழி என்ற வழக்கமான வார்த்தை ஜாலங்களை கூறினாலும் இந்தியை மறைமுகமாக உள்ளே புகுத்துவதுதான் ஒன்றிய அரசின் திட்டம் என்பதை தமிழ்நாட்டு மக்கள் தெளிவாகவே அறிந்து வைத்துள்ளனர். இந்தி உள்பட ஒரு மொழியை விரும்பி படிப்பதற்கும், வலுக்கட்டாயமாக திணிப்பதற்கும் உள்ள வேறுபாடுகளையும் தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவர். ஏற்கனவே இந்தி எதிர்ப்பிற்கு எதிராக தமிழ்நாடு பல போராட்ட களங்களை கண்ட மண். பா.ஜ. தவிர திராவிட கட்சிகள் மட்டுமல்லாது மற்ற பெரும்பாலான கட்சிகளும் இன்றைக்கும் இந்தி மொழி திணிப்பிற்கு எதிரான நிலைப்பாட்டினையே கொண்டுள்ளன.*

*இதை ஒன்றிய அரசு நன்கு அறிந்துள்ள போதிலும் தொடர்ந்து தமிழ்நாட்டு நலனுக்கு எதிரான மக்களின் மனநிலைக்கு மாறான நடவடிக்கைகளையே தொடர்ந்து எடுத்து வருகின்றது. மும்மொழி கொள்கை விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு குறித்து விரிவாகவும், தெளிவாகவும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசுக்கு கடிதம் மூலம் விளக்கி யுள்ளார். ஆனால் அதை ஏற்காமல் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கடிதம் எழுதியிருக்கிறார். இவ்வாறு தமிழ்நாடு அரசை ஒன்றிய அரசு நிர்பந்தம் செய்வது வீண் பிடிவாதமே.*

*இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*